Tsi11T

11417

தென்காசி மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2023

-----

வகுப்பு 11

கால அளவு: 3.00 மணிநேரம் **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14×1=14**

**ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) தமிழின் முதல் பாவடிவ நாடக நூல்

அ) இரகசியவழி ஆ) மனோன்மணீயம்

இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

2) தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை

அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

3) உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு

அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்

இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

4) 'அலைகடல்' - இலக்கணக்குறிப்புத் தருக.

அ) பண்புத்தொகை ஆ) தொழிற்பெயர்

இ) வினைத்தொகை ஈ) உருவகம்

5) **பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க:**

அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்

ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்

இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை

ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்

i) அ, ஆ ii) அ, ஈ iii) ஆ, ஈ iv) அ, இ

6) "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்

அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

7) காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்

இ) முருகன் ஈ) பாரதியார்

8) திருக்குறளில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை

அ) 25 ஆ) 12 இ) 9 ஈ) 7

9) அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன் - யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

10) கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம்பெற்ற மரபு

அ) பெயர் மரபு ஆ) வினை மரபு

இ) ஒலி மரபு ஈ) இவை மூன்றும்

Scanned with ACE Scanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



11) பால்வீதி, நேயர் விருப்பம், ஆலாபனை - முதலான நூல்களை எழுதியவர்

அ) அப்துல்ரகுமான் ஆ) பாரதிதாசன்

இ) வைரமுத்து ஈ) வாணிதாசன்

12) 'பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்' என்றும் 'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி' என்றும் அழைக்கப்பட்ட கவிஞர்

அ) சுந்தரம்பிள்ளை ஆ) பாரதியார்

இ) அப்துல்ரகுமான் ஈ) இரவீந்திரநாத்தாகூர்

13) 1971-ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற இலத்தீன் அமெரிக்காவின் மிகச்சிறந்த கவிஞர்

அ) வால்ட்விட்மன் ஆ) ஆற்றூர் ரவிவர்மா

இ) ஸ்டெஃபான் மல்லார்மே ஈ) பாப்லோ நெருடா

14) ''ஒற்றை வைக்கோல் புரட்சி'' என்ற நூலை எழுதியவர்

அ) ஜான் பென்னி குவிக் ஆ) எம்.எஸ். சுவாமிநாதன்

இ) நம்மாழ்வார் ஈ) மசானபு ஃபுகோகா

## பகுதி - II

### பிரிவு - 1

ஏவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக: 3×2=6

15) மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?

16) சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

17) காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?

18) ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

### பிரிவு - 2

ஏவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்: 2×2=4

19) இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

20) சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

21) 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

### பிரிவு - 3

ஏவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்: 7×2=14

22) உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?

23) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

அ) அயர்ந்து ஆ) எழுந்த

24) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:**

அ) பயமில்லை ஆ) அரும்பொருள்

25) **வினாத்தொடராக்குக:**

தஞ்சைக்கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.

26) **கீழ்க்காணும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக:**

அ) மகாஜனம் ஆ) சாகரம்

27) **விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக:**

அ) எழுத்து, சொல், ............., யாப்பு, .............

ஆ) எழுத்து, ............., சீர், தளை, ............., தொடை

28) **அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக:**

அ) அறிவைத் தேடிப் போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம் ............. (அகம்)

ஆ) வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது ............. (மானம்)

Scanned with ACE Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



29) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**
அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.

30) கலைச்சொல்லாக்கம் - பொருள் தருக.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக:** **2×4=8**

31) வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

32) சேரநாடு செல்வ வளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

33) ''கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது'' - யாது?

34) அப்துல்ரகுமானின் கதையிலிருந்து வினா-விடை வடிவத்திற்கு ஏற்ற அடிகளைத் தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக:** **2×4=8**

35) ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

36) ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

37) 'சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும்' - குறிப்பு வரைக.

38) ஐந்து விவசாய மந்திரங்கள் யாவை?

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக:** **3×4=12**

39) நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.
- **இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

**(அல்லது)**

உவமை அணியை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

40) **இலக்கிய நயம் பாராட்டுக: (மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக)**
தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின்ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண்திரை எழினிகாட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிதுபாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ.
**- கம்பர்**

41) **பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக:**
அ) கூடிவாழ்ந்தால் கோடி நன்மை

**(அல்லது)**

ஆ) சுடர் விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்

42) அருவி **அல்லது** தாயன்பு என்னும் தலைப்பில் புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

43) **தமிழாக்கம் தருக:**

1. You must be the change you wish to see in the world.
2. Nobody can hurt me without my permission.
3. Education is the most powerful weapon, which you can use to change the world.
4. Culture does not make people, people make culture.

www.Padasalai.Net

Scanned with ACE Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



43) **செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

'தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன்' என்று போற்றப்படும் சி.வை.தாமோதரனார் இலங்கை யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்து, தம் இருபதாவது வயதிலேயே 'நீதிநெறிவிளக்கம்' என்னும் நூலை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டு, அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்தார். 1868-ஆம் ஆண்டு, தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையும் பின்னர் கலித்தொகை, இறையனார் அகப்பொருள், வீரசோழியம் உள்ளிட்ட பல நூல்களையும் செம்மையாகப் பதிப்பித்துப் புகழ்கொண்டார். அத்துடன் நில்லாது, கட்டளைக் கலித்துறை, நட்சத்திரமாலை, சூளாமணிவசனம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

பெர்சிவல் பாதிரியார் அவரைத் தாம் நடத்திய 'தினவர்த்தமானி' என்னும் இதழுக்கு ஆசிரியராக்கினார். அரசாங்கத்தாரால், சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பட்டார். 1884-ஆம் ஆண்டில் புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

**வினாக்கள்:**

1. 'தமிழ்ப்பதிப்புலகின் தலைமகன்' என்று போற்றப்படுபவர் யார்?
2. 'தினவர்த்தமானி' என்னும் இதழை நடத்தியவர் யார்?
3. கல்லூரி, உயர்நீதிமன்றம், வரலாறு ஆகியவற்றிற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக.
4. அறிஞர்களின் கவனத்தைக் கவர அவர் ஆற்றிய பணி யாது?

## பகுதி - IV

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3×6=18**

44) அ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

**(அல்லது)**

ஆ) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.

45) அ) 'கல்லும் கதை சொல்லும்' - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.

46) அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

**(அல்லது)**

ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **4+2=6**

47) அ) 'நான்' என்பாய் ............ எனத் தொடங்கும் தொலைந்து போனவர்கள் பாடல்.

ஆ) 'யான்' என முடியும் குறளை எழுதுக.

----------

www.Padasalai.Net

Scanned with ACE Scanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com